## சுருக்கம்

பால்வளத்துறை – பால் கொள்முதல் விலை மற்றும் வணிக ரீதியாக சில்லறை விற்பனை விலையில் விற்கப்படும் நிறை கொழுப்புப் பாலின் விற்பனை விலையை 05.11.2022 முதல் உயர்த்தி நடைமுறைப்படுத்தப்பட்டது – பின்னேற்பாணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(பாஉ.1)துறை

அரசாணை (நிலை) எண்: 132

நாள்: 16.11.2022
சுபகிருது, ஐப்பசி –30
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண்.112, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (பா.உ.1) துறை, நாள் 17.08.2019.

2 அரசாணை (நிலை) எண்.60, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (பா.உ.1) துறை, நாள் 7.05.2021.

3 தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய மேலாண்மை இயக்குநரின் கடித ந.க.எண்.8776/பா.உ.1/2019, நாள்: 03.11.2022.

4 செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் அவர்களது 03.11.2022 நாளிட்ட செய்தி வெளியீடு எண்கள். 1930 மற்றும் 1931.

------

**ஆணை:**

தமிழக கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் பால் உற்பத்தியாளர்களின் பங்களிப்பை கருத்தில் கொண்டும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களுக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையினை கருத்திற்கொண்டும் பால் கொள்முதல் விலை உயர்த்திடவும், நுகர்வோர் நலன் கருதி, இல்லங்களில் நுகர்வோர் பயன்படுத்தும் சமன்படுத்தப்பட்ட பால் (Toned Milk) (நீல வண்ண பாக்கெட்டில் வழங்கப்படுவது) மற்றும் நிலைப்படுத்தப்பட்ட பால் (Standardized Milk) (பச்சை வண்ண பாக்கெட்டில் வழங்கப்படுவது) ஆகியவற்றின் விலையில் எவ்வித மாற்றமுமின்றி தற்போதைய நிலையே தொடரவும், நிறை கொழுப்புப் பாலைப் (Full Cream Milk) பொறுத்தவரையில், நுகர்வோர் வாங்கும் பாலின் விலை உயர்த்தப்படாமல் வணிகரீதியாக பயன்படுத்தப்படும் நிறை கொழுப்புப் பாலின் விலையை மட்டும் உயர்த்தி வழங்குமாறு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய மேலாண்மை இயக்குநர் அவர்கள் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவின் அடிப்படையிலும், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட செய்தி வெளியீடுகளின்படியும், 05.11.2022 முதல்

(த.பி.பா)

கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்பட்ட பால் கொள்முதல் விலை மற்றும் மாற்றியமைக்கப்பட்ட வணிக ரீதியாக பயன்படுத்தப்படும் நிறை கொழுப்பு பாலின் (Full Cream Milk) விற்பனை விலைக்கும் பின்னேற்பாணை வழங்கி அரசால் ஆணை வெளியிடப்படுகிறது:-

i. <u>கொள்முதல் விலை:-</u>

அ) ஒரு லிட்டர் பசும்பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.32.00-ல் இருந்து ரூ.3/- (ரூபாய் மூன்று மட்டும்) உயர்த்தப்பட்டு, ரூ.35.00 ஆக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆ) ஒரு லிட்டர் எருமைப்பாலின் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.41.00-ல் இருந்து ரூ.3/- (ரூபாய் மூன்று மட்டும்) உயர்த்தப்பட்டு, ரூ.44.00 ஆக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ii. <u>விற்பனை விலை:-</u>

வணிக ரீதியாக சில்லறை விற்பனை விலையில் விற்கப்படும் நிறை கொழுப்பு பாலின் விற்பனை விலையினை மட்டும் லிட்டர் ஒன்றுக்கு ரூ.12/- (ரூபாய் பன்னிரண்டு மட்டும்) உயர்த்தப்பட்டு, ரூ.60.00 ஆக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
ஆணையர்,
பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை-51.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை-35.
அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்.
வழியாக:-மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், சென்னை-35.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (பால்வளத்துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் (காப, பா (ம) மீ) துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, சென்னை-9.
இருப்பு கோப்புகள்/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/11/22
பிரிவு அலுவலர்.
16-11-22